DUPLICATE

# இந்துசாதனம்.

## THE HINDU ORGAN.

**சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.**

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரூ. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி. விளம்பரங்கள் முற்பண மனுப்பினுலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௬. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சிஹூ ஆனிமீ ௨௪௨; ( 1924 ஜூலை 7 ) திங்கட்கிழமை { இலக்கம்—௨.


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா அணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தாங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்ருள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்கவே.

**புத்தக விளம்பரம்.**

தெல்லிப்பழை பிரமஸ்ரீ வித்துவான் சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம், சேர்ந்த கட்டிவிலை ரூபா 2 00
2. நம்பி அகப்பொருளுரை ரூபா 1 00
3. இரகுவமிசம் மூலமும் உரையும் முற்பாகம் ரூபா 1 சதம் 50
4. சனிதுதி விலை அணு 1
5. தசகாரியம் அணு 5

க. செல்லம்ஐயர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணார்பண்ணை.

சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம். (H. 26.)

"ஸ்ரான்டேர்ட்"

**கொழுக்கியோடுகள்.**

**(Standard Tiles)**

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றேம்:—

முதலாவது, இத்தஓடுகள்மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றுவது, இந்த வட இலங்கையின் தேசசுவாத்தியத்திற்கு இயைந்தஓடுகள் இவைகளேயாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற மூன்றுவருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றேம். இந்த மூன்றுவருட காலத்துள் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை[illegible] செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்[illegible]து சிறந்ததென்பதற்கு இந்த ஒருநியாயமு[illegible]மே போதிய சான்றாகும்.

ஓடுகள்யாழ்ப்பாணத்திலும் வல்லுவெட்டித்துறையிலும், பருத்தித்[illegible]யிலும் எங்களிடம் பெறற்பாலன.

S. வீரகத்திப்பிள்ளை,
சக்திவிலாசம்,
"Ruby" வல்லுவெட்டித்துறை
(H. 25.)

**புத்தக விளம்பரம்.**

(தபாற்செலவு வேறு).

| | ரூ. | சத. |
|---|---|---|
| பாரதம் ஆதிபருவவுரை | 3 | 25 |
| டை சபாபருவவுரை | 2 | 25 |
| டை இரண்டும் ஒரே முறையில் | 5 | 00 |
| தொல்காப்பியம் எழுத்ததிகாரம்-நச்சினுர்க்கினியம் | 4 | 50 |
| டை சொல். சேனுவரையம் | 4 | [illegible] |
| அகப்பொருள் விளக்கவுரை (குமாரசுவாமிப்புலவர்பதிப்பு) | 1 | 75 |
| டை சிவானந்தையர் பதிப்பு | 1 | 00 |
| இலக்கியச் சொல்லகராதி | 1 | 75 |
| சித்தியார் சுபக்கம் இருவருரை | 5 | 00 |
| டை மு. திருவிளங்கம் பதிப்பு 4-பகுதிகள் | 2 | 10 |
| திருவுந்தியார், திருக்களிற்றுப் படியாருரை | 0 | 50 |
| தத்துவப்பிரகாசவுரை | 1 | 75 |
| திருக்குறள் சரவணப்பெருமாளையருரை | 3 | 75 |
| இரகுவமிசவுரை (முதற்பாகம்) | 1 | 50 |
| தருக்கசங்கிரகம் | 2 | 00 |
| ஜாதகபாஸ்கரன் | 3 | 50 |
| இராமாயணநாடகம் | 2 | 25 |
| இராமாயணம் பாலகாண்டம் அரும்பதவுரை | 2 | 00 |

விலாசம்:— மானேஜர்,
சோதிடப்பிரகாசயந்திரசாலை,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
(Q. 47.)

[ESTABLISHED 1909].

**MESSRS. A. S. M. A. KHADER BROTHERS**
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** (*South Arcot District*).

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கோள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.
அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட பின்னி [illegible]ரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் [illegible] களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னேர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

**லேகியத்தின் முக்கிய குணமாவது.**

வாத பித்த சிலேத்ம மிருதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீரெரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய ரோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய ரோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றேம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினுல் V. P. தபால்செலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். டையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது டைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதனறியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினுலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo,
(Y. 19,)

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா.

## பித்தளை விளையாட்டுச் சாமான்கள்.

அழகும், பளபளப்பும் உள்ளது. இந்துக்கள் வீட்டில் சமையல் செய்யும் பாத்திரங்களைப் போன்ற வடிவுள்ளது. ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 விதசாமான்கள் அடங்கியுள்ளன-

| | | | |
|---|---|---|---|
| 1 தெ ஜோடிப்பு | 1க்கு | ரூபா 1 | அணு 8 |
| 2 தெ ,, | ,, | ரூபா 3 | அணு 4 |
| 3 தெ ,, | ,, | ரூபா 2 | அணு 8 |

கே. எஸ். முத்தையா & கம்பனி,
"ஸில்க் ஹவுஸ்" காசி.
(Y. 29.)

[illegible] மாசத்தில் 200 குஷ்டரோகிகள் [illegible] விட்டார்கள்!
திமிர், குஷ்டம், தீர்ந்து விட்டன!
மதமதப்புமாரி சொரணையுண்டாகி விட்டன.
தடிப்புகள் மாறிவிட்டன, பத்துகள் மறைந்து விட்டன,
சொரிகள் உதிர்ந்து வி[illegible]டன, அரிப்புகள் மாறிவிட்டன,
ரணங்க[illegible] ஆறிவிட்டன,
குன்மம், கிரந்தி, மேகமெல்லாம், தீர்ந்து, விட்டதென்று தினம்
நற்சாக்ஷிகள் வந்தவண்ணமாயிருக்கின்றன.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது
அநேக நற்சாட்சிகளும் தங்கமெடலும் பரிசு பெற்று
உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

25-8-1923-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் மருந்து வைத்திய கண் காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட் கிளாஸ் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்திய ஆசிரியர் என்று பட்டமும் பெற்றவர்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். உத்தரவாத முள்ளது. குணம் இல்லை என்பவர்களுக்கு பணம் திரும்பக்கொடுக்கப்படும். வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்: முப்புவைக் கண்டுபிடித்தவர்.

## தாம்பர பஸ்பம்.

சகல வியாதிக்கும் கைகண்டது.
முப்புவினுல் தளுக்கற நீற்றியது. களிம்பற்றது.
வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது பத்தியமில்லை.
வியாதிகளை விபரமாய் எழுதவும்.
உங்கள் வியாதிகளை மறுமுறை திரும்பிவராமல் நிவர்த்திக்கும் வல்லமை யுடையது.

20-வருஷ காலமாய் அனேக வியாதிகளுக்குக்கொடுத்து அனுபவமுள்ளது. இந்த மருந்தினுல் தீராத வியாதிகள் கிடையாது. சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே மருந்து போதும்! ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதிகளெல்லாம் இந்த மருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. திடீரென்று சம்பவிக்கக் கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகுசீக்கிரத்தில் நிவர்த்திக்கும். சீக்கிரத்தில் குணப்படுத்துகிறதை பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஜுரம் 64-ஜன்னி 13-தோஷம் 7-ம் ஜாஸ்தியாகி எந்த மருந்திலும் தீராத சமையம் உட் கொண்டால் அந்த க்ஷணமே நிறுத்தும் 3-நாள் மருந்தே போதும். வெகு சீக்கிரம் பிரமிக்கும்படி வாய்வு 300-ம் இதில் அவசியம் தீரும்; வைத்தியர் தேவையில்லை. மேக நீரினுல் பொறுக்கமுடியாத கைகால் குடச்சலை உடனே நிறுத்தும். குறை நோய் சம்பந்தமான ஆராதமணங்களும், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அந்தமட்டில் புண்கள் ஆறிவிடும். பின் புண்ணுகாது. எந்த மருந்திலுந் தீராத எவ்வளவு நாள்பட்ட கிரந்தி, புண் புரைகளும் இதில் அவசியந் தீரும்; வெட்டை, மூத்தி மொழிகளில் சூலை, வீக்கம், வலி, கை கால் குடைச்சல் கிரந்தி, கரைச்சல், மேக ஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும் நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேக வியாதிகளும் இதில் அவசியம் தீரும். ஜுரம், 64 ஜன்னி, 13 தோஷம், 7 வாயு, 26 மேகம், 21 குஷ்டம், 18 சூலை, 18 கிரந்தி, 6 திமிர், 10 குன்மம், 8 இருமல், 8 க்ஷயம், 6 காசம், 8 மூலம், 9 பவுந்திரம், அரையாப், 8 கண்டமாலை, 9 கிராணி, 6 விஷநீர், 4 விக்கல், 8 வெடிப்பு ரணம், வெள்ளை, வெட்டை, சுந்திமேகம், எரிச்சல், கடுப்பு, நீரடைப்பு, கல் அடைப்பு, ஆறாதபுண், புரை, குழிபுண், புற்றுக்கட்டி, பிளவை, காக்கை வலிப்புகள், பக்கவாதம், நடுக்குவாதம், மதிமதப்பு, சூதகவாய்வு, வயிற்றுவலி முதலியசகலவித கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். அனுபவத்தில் கை கண்ட அருமையான மருந்து. 80 வேளை ரூபா 40; 40 வேளை ரூபா 20; 20 வேளை ரூபா 10; ஏழைகட்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்.
**R. M. K. வேலுசாமிபிள்ளை,**
சித்த ஆயுள்வேத வைத்யசாலை, பழனி.
(Y. 31.)

# இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:— இரத்தாட்சி௵ ஆனி௴ 24௳ திங்கட்கிழமை.

## விபரீதவிளக்கமும் பொருந்தாவுரையும்.

"இந்து சாதனம் ௩௰-ம் புத்தகம் ௩௪-ம் இலக்கப் பத்திரிகையில் தமிழ்மகளிர் கழக விஷயமாகவும் தீண்டாமை யொழித்தலைக் குறித்தும் வெளிவந்த விஷயத்தைவிட்டு, குறித்த கழக மகளிருக்கிடையிற் பெரும் விபரீதவிளக்கமும் அவ்விளக்கங் காரணமாகப் பொருந்தாவுரைகளும் பிறத்தலாயின. அக்கழக மகளிர் மூவர் தங்கழகத்தையும் அக்கழகத்தில் எடுத்தாளப்பட்ட விஷயங்களில் ஒன்றாகிய தீண்டாமையையும் இப்பத்திரிகை வாயிலாகப் பெரிதும் கண்டித்துவிட்டோமென்றும், கண்டித்ததோடு அமையாது தகாத சொற்களை உபயோகித்துவிட்டோமென்றும் ஒருகடிதமெழுதி இங்கு வெளிவரும் சில பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கின்றனர். அவ்வளவில் நில்லாது அவ்விஷயத்தை எழுதியவர் இன்னாரென்பதைக் குறித்துச் சோதிடமுஞ் சொல்லுகின்றனர்.

விஷயம் எவரால் எழுதப்பட்டாலும் அவ்விஷயத்தின் தகைமை தகாமைகளை உற்றுணர்ந்து வெளியிடுதல் பத்திராசிரியர்மேற் பொறுத்த கடனாதலின், இப்பத்திரிகையில் வெளிவந்த குறித்த விஷயத்திற்கும் பத்திராசிரியரே பொறுப்புடையரென்பது மறுக்கத் தக்கதன்று.

இப்பத்திரிகை மீது சுமத்தப்படும் இரு தோஷங்களில் முதனின்றதாகிய மகளிர் கழகத்தை நீதியினமாகவும் பேடித்தனமாகவும் கண்டித்தல் என்னும் முறையீட்டை யெடுத்து ஆராய்வாம். பெண்களும் ஆடவரைப்போலக் கற்று அறிவுடையவராய் வரல்வேண்டும், தம்பாலாரை நன்னிலையில் வைத்தல்வேண்டும் என்னும் அபிப்பிராயம் இப்பத்திரிகைக்கும் உடன்பாடேயாம். இந்த விஷயமாகப் பல வியாசங்கள் இப்பத்திரிகையிற் காலந்தோறும் வெளியிடப்பட்டுவருதலை அபிமானிகள் எல்லோரும் இனிதறிவர். மகளிர் கழகத்தைக் குறித்துச் சொல்லுகில் திரிகோணமலையிற் சில வருடங்கட்கு முன்னிருந்த மகளிர் கூட்டமொன்றை இப்பத்திரிகையும் அதிகம் ஊக்கப்படுத்திவந்தமையும், அம்மகளிர் எழுதியுதவிய விஷயங்களை ஏற்று வெளியிட்டுவந்தமையும் அக்காலத்தில் இப்பத்திரிகையைப் படித்தவர்கட்கு நன்கு தெரிந்திருக்கும். இவற்றானும் இவைபோன்ற பல ஏதுக்களானும் இப்பத்திரிகை பெண்கள் செய்யும் நன்மையான கருமங்களுக்கு விரோதமானதன்றென்பதும், அவ்வாறான கருமங்களுக்குத் துணைபுரிவது இப்பத்திரிகையின் இயல்பென்பதும் இனிது புலனாகும். இவ்விஷயம் பொறாமைகாரணமாக எழுதப்பட்டதெனின், அங்ஙனமன்று. இவ்விஷயத்தை எழுதியுதவிய ஸ்ரீமதி சிவகாமியம்மாள் சந்ததிசந்ததியாகத் தமிழ்க்கல்வியைக் கற்றுப் பாண்டித்தியமடைந்த பெண்கள்குடும்பத்தைச் சார்ந்தவளாதலின் இம்மாது பொறாமைப்படத்தக்க நிலையிலிருக்கின்றனளேயன்றிப் பொறாமைப்படும் நிலையிலிருக்கவில்லை. இவள் அற்பகல்வியறிவுகொண்டு அம்பலம் ஏறுபவளல்லள்.

இந்து சாதனத்திற் கடியப்பட்ட விஷயம் பெண்கள் தீண்டாமையிற் றலையிடுதலைப்பற்றி நின்றதேயாம். கழகத்தார் எடுத்தாண்ட தீண்டாமை யொழித்தலாகிய விஷயம் யாழ்ப்பாணத்தாருக்குப் புதியதாகும். யாழ்ப்பாணத்தவருள்ளும் விசேஷமாகச் சைவசமயத்தவர்களாயுள்ளார் இவ்வாறான புதியவிஷயங்களிற் றலையிடின் சமயத் துரோகமும் விரோதமும் விளையுமென அஞ்சுகின்றனர். ஆராய்வும் அறிவுமுள்ள ஆடவர்களே இவ்விஷயத்திற் றலையிட அஞ்சும்போது மகளிர்களாயுள்ளார் இவற்றிற் றலையிடுதல் முறையல்லவென்பதே இப்பத்திரிகையின் கொள்கை. தீண்டாமையை யொழித்தல் சாலுமோ சாலாதோவென்னுஞ் சந்தேகம் அக்கழக மகளிரிடத்தும் இருப்பதாக அவர்கள் வார்த்தையாற் றெரியக்கிடக்கின்றது. இவ்வாறான அபிப்பிராய பேதமிருக்கும்போது ஒருசமயக்கொள்கையை எடுத்துப் பிரதிபாதிப்பதாகிய இந்து சாதனம் இவ்விஷயத்திற்கு இடங்கொடுத்தமை நூதனமன்று. தீண்டாமையொழித்தற்கு மாறாக இப்பத்திரிகையில் வெளியிடும்படி தக்கோரால் எழுதியனுப்பப்பட்டிருக்குங்கடிதங்கள் பலவுள. இவற்றுட் சில பெண்பாலாராலேயே எழுதப்பட்டன. இக்கடிதங்கள் சந்தர்ப்பம் நோக்கிவெளியிடப்படும்.

இப்பத்திரிகையில் வெளிவந்த குறித்த விஷயத்தில் ஏற்றப்பட்டுள்ள பிரதானமான குற்றம் தகாதசொற் பிரயோகமாம். பயனில்சொல் தகாத சொல் என்னும் இச்சொற்களைப் பாராட்டுவதற்குப் பெரிதும் பின்னிற்பது இந்துசாதனமேயாம். ஒரே பூவிலிருந்தே வண்டு தேனையும் சிலந்தி நஞ்சையும் கிரகிக்கின்றன. அது பூவின் குற்றமன்று. நீண்டுதல் தீண்டாமை என்னுஞ் சொற்களை எக்கருத்திற் கழகத்தார் கொண்டிருக்கின்றனரோ அக்கருத்துப் பொருந்தவே இப்பத்திரிகையும் கொண்டிருக்கின்றதென்பதைக் கழகத்தாருணர்ந்து விபரீத கருத்துக் கொள்ளா தொழிதல்வேண்டும். செந்தமிழ் சிலேடை மலிந்ததென்பர் அறிவுடையோர். கூட்டத்திற்குச் சென்ற பெண்பாலாராயுள்ளார் மினுமினுத்தனர் புறுபுறுத்தனர் கைவீசிப் பேசினர் என்று சொல்லுதல் எப்பத்திரிகைக்கும் மரபன்றாதலின், அங்ஙனம் கழகவிஷயமான பத்திரிகையில் வெளிவந்தமையையிட்டுச் சில இந்துசாதனத்திற் கண்டிக்கப்பட்டமை மெய்யே. ஆயினும் அவை மகளிர்கட்கு ஆத்திரத்தை விளைக்காமை நூதனமே.

"காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண், ஆய்தல் அறிவுடையார்க்கண்ணதாம்" என்றபிரகாரம் நமது சகோதரப் பத்திரிகைகள் தோஷமேற்றும்போது நன்கு ஆராய்ந்து தோஷமேற்றுதல்வேண்டும். இப்பத்திரிகையில் வந்த தகாத வாக்கியங்களில் ஒன்றையேனும் குறிப்பாகத்தானும் காட்ட முயலாது இதன்மீது குற்றங் கூறத் துணிந்தமை நேரிதாகுமா? தம் பத்திரிகையில் எடுத்துக் காட்டுதற்குத்தானும் யோக்கியமற்ற வாக்கியங்களாதலின் எடுத்துக் காட்டாது விடுத்தோமென்று நம் சகோதர பத்திராசிரியர்கள் சமாதானஞ் சொல்ல முயல்வரேல், அவர்கள் தயைகூர்ந்து அவ்வாக்கியங்கள் இன்னின்னவென்று அந்தரங்கமாக இப்பத்திரிகை அதிகாரிகட்குக் குறித்தனுப்புவார்களாக. மேலும் இளமை வாய்ந்த மகளிர் திருவாக்கினின்றும் "அயோக்கியத்தனமான" "பேடித்தனமாக" "கயவர்" "அயோக்கியர்" "எளியவர்" என்பன போன்ற சொற்கள் வெளிவந்திருத்தல் எமது சகோதரப் பத்திராசிரியர்கட்கு வெறுப்பைக் கொடாதிருப்பதென்னையோ? "பயனில்சொற் பாராட்டுவானை மகனெனல், மக்கட்பதடியெனல்".

## "மெய்யடியார்கள் விரைந்து வம்மின்"!

"சைவசமயமே சமயம்" ஆகும். அச்சமயநூல்கள் சிவபெருமானுக்கு மேலான கடவுள் இல்லையெனக் கூறும். அப்பரம்பொருளை "ஆதியு மந்தமுமிலா அரும் பெரும் சோதி" என்றும், "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருள்" என்றும், "பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப்பெற்றியன்" என்றும், "எல்லாவுலகுமானாய் நீயே" என்றும், "செல்வாய செல்வந் தருவாய் நீயே" என்றும், திருவருட் பேறு பெற்ற மகான்கள் போற்றித் துதித்து உய்ந்து ஈடேறினர். அவர்கள் திருவருள்வசத்தாற் பாடியருளிய அரிய சைவநூல்களே எம்மை ஈடேற்றுவதற்கு இன்றியமையாதனவாகும். பூர்வபுண்ணியவசத்தினால் அச்சைவத் திருமுறைகள் எம்மிடமிருந்தும் நாம் "தண்டாமரையினுடன் பிறந்துந் தண்டேனுகரா மண்டூகம்" போன்று அவ்வரிய நூல்களைக் கற்றுணராது காலம்போக்கலானேம். இதனால் எமது சமயக் கொள்கைகள் மாறின. நவீன விபரீதக் கொள்கைகள் பல முன்னேறின. மேல்நாட்டுப் பழக்க வழக்க ஒழுக்கங்களைப் பின்பற்றுவோராலும், மாயாவாதம் லோகாயதம் முதலான சமயக்கொள்கைகளையுடையோராலும் எமது சைவசித்தாந்தக் கொள்கைகள் இடர்ப்படலாயின. அரிய சைவசித்தாந்தக் கொள்கைகளை எடுத்துப் பிரதிபாதிக்க முயலும் எம்மோரெல்லார்க்கும் இடர் நேரும்போற் றோன்றுகின்றது. சமயபோதனை வேண்டியளவுக்குச் செய்யப்படாமையும் இதற்கு ஒரு விசேஷ காரணமாகும்.

இக்குறைகள் நிவிர்த்தியாவதற்கும், சைவ சமயநிலை பண்டுபோற் சிறப்படைவதற்கும் சபைகள் வேண்டும். அச்சபைகளில் உண்மைச் சமயாபிமானமுடைய மெய்யடியார்கள் இடையீடின்றி உழைத்தல் வேண்டும். சபைகள்தோறும், சனங்கள் கூடும் இடங்கள் தோறும் (விசேடதினங்களிலும் உற்சவ காலங்களிலும்) ஆலயங்கள்தோறும் சமயப் பிரசங்கங்கள் செய்யப்பெறுதல்வேண்டும். இது சிரமமின்றி இலகுவிற் செய்துமுடிக்கக்கூடிய கருமமன்று; சமய அபிமானமுடையோர் சிரமமானதென நினைந்து கைவிடக்கூடிய கருமமுமன்று. எமது சமயகுரவர்[illegible]மும் சமய பரிபாலனத்தின் பொருட்டு வெகு சங்கடங்களுக்கு ஆளாயினரென்றால் நாம் அனுபவிக்கவேண்டிய சங்கடங்கள் இத்தன்மைத்தென்று கூறவும் வேண்டுமோ? வேண்டா.

ஆலயக்கட்டிடங்களைப் பெரும் தொகைப்பணம் செலவுசெய்து அமைத்துவிடுதல் சமயபரிபாலனமாக மாட்டாது. இப்பொழுது இங்குள்ள சமயநிலைதானும் திருத்தமுறாது. பண்டைக் காலத்தில் மரநீழல்களே ஆலயங்களாக விளங்கின. அவ்வாலயங்களில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கப்பெருமான், பெய்யும் மழைக்கும் எறிக்கும் வெய்யிலுக்கும் வீசும் காற்றுக்கும் ஆளாகியும் அன்புடன் முறை பிறழாது வழிபடும் மெய்யடியார்களுக்குத் திருவருள்சுரந்தனர்; பத்திவலையில் அகப்பட்டுக் காட்சிகொடுத்தனர்; முத்திப்பேற்றையுங் கொடுத்தருளினர். ஆதலின், ஆலயம் கட்டிடம் இல்லாதிருந்தாலும் சிறிதாக இருந்தாலும் பெரிதாக இருந்தாலும் அன்புடன் நெக்கு நெக்குருகும் மெய்யடியார்களால் வழிபாடு செய்யப்பெறல்வேண்டும்; பத்திநெறி கைவந்த மெய்யடியார்கள் கருப்பூரம் நெய் முதலியவற்றினால் தீபமேற்றலன்றி நவீனவெளிச்சங்களைக் கைகொள்ளார்கள். வாணவிளையாட்டைக் கைக்கொள்ளார்; வாணவிளையாட்டினால் ஒருவருக்குச் சேமோசம் ஏற்படுவது கண்டு உயிர் தரியார்; தாசியர் நடனத்தை அருவருத்து ஒதுக்குவர். இன்னும் இவைபோன்ற பல துர்ச்செயல்கள் அறவேயொழிந்து ஆலயங்கள் சிறக்கவேண்டுமாயின், ஈசுர கடாட்சம் பெருகவேண்டுமாயின், நமது சைவசமயம் விருத்தியெய்த வேண்டுமாயின் சமயாபிமானமுள்ள அடியார்கள் முன்வரல்வேண்டும். 'அரகரா'என்றமந்திரஓசை திசைகளை யூடுருவுதல் வேண்டும். கோயிலதிகாரிகளுடைய கடமைகள் எவை என்பதையும், அவர்கள் எவ்விதமாகஒழுகவேண்டுமென்பதையும் காலந்தோறும் எடுத்துப் போதித்தல் வேண்டும். நித்தியபூசை தவறுமாயின், உற்சவ ஒழுங்குகள் முறைமாறுமாயின், அங்கு அடாத துர்க்கருமங்கள் நிகழுமாயின், இன்னும் இவைபோன்ற பிறவாற்றாலும் சமயநிலை குன்றுமாயின் அவ்வதிகாரிகளுக்கு வந்துசேரும் நரகவேதனைகளை எடுத்து விளக்கிக்காட்டுதல் வேண்டும். மெய்யடியார்கள் அவற்றைப் போதிக்கும்பொழுது அதிகாரிகளுக்கும் ஏனையோர்க்கும் கோபமேனும் மனஸ்தாபமேனும் ஜெனிக்கவிடலொண்ணாது. அதிகாரிகளின் உள்ளத்தில் நன்கு பதியக்கூடியதும் அவர்களை வசீகரிக்கக்கூடியதுமான முறைகளையே பெரும்பாலும் கைக்கொண்டு போதித்தல் வேண்டும். பிறப்பிறப்பினால் எய்தும் வேதனைகளையும் மானுடதேகத்தின் பெருமையையும், நாம் அதனைப் பெற்றுக்கொண்ட அருமையையும், "இப்பவோ பின்னையோ மத்தியானத்திலோ" என்றிருக்கும் இதன் அநித்திய அபாய நிலையையும், இப்பொழுது நாம் செய்யவேண்டிய கடமையையும், அவர்கள் உணரும்படி அன்புடனும் ஆதரவுடனும் போதித்தல் வேண்டும்.

இந்த அரும் பெரும் திருத்தொண்டில் ஈடுபட்டு உழைத்தற்கு மெய்யடியார்கள் முன்வருதல் வேண்டும். சமயத்தில் உண்மையான அபிமானமுடையோர்கள் நிறைந்த சபைகள் வேண்டும். அச்சபைகள் திருவருளை முன்னிட்டு உழைத்தல் வேண்டும். சமயநிலை சிறக்கவேண்டும். நாமும் உலகமும் ஈடேறவேண்டும்.

## சமாசாரம்.

தூங்கியிறந்தான்:—சென்ற வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வைத்தியசாலையின் சமீபத்திலுள்ள ஒரு கடையில் ஒருவன் தூங்கி இறந்து கிடக்கக் காணப்பட்டான்.

வெடிமருந்து விபத்து:—இந்த மாதம் 1௳ மாத்தளையில் ஒருகடைக்காரன் வெடிமருந்துப் பெட்டி காத்திராதவண்ணம் வெடித்தமையினால் வீட்டுக் கூரைக்குமேல் வீசப்பட்டு உடனே இறந்தான்.

மோரிஸ் தீவுப் பிரதிநிதிக் கூட்டம்:—இந்தியர்களைக் குடியேற்றுவதன் சம்பந்தமாக மோரிசிலுள்ள நிலைமையை நன்கு அறிந்து வரும் பொருட்டுக் குன்வர்மகாராசாவை அரசாங்கத்தார் தெரிவுசெய்திருக்கின்றனர்.

ஸ்ரீமதி சரோஜினி தேவி:—சமீபத்தில் இம் ஆபிரிக்காவுக்குச்சென்ற ஸ்ரீமதி சரோஜினிதேவி அங்குஒருநாள் தங்கினர். பிரித்தானிய தேசாந்தர மந்திரியும் (றெசிடென்ற்) சான்ஸ்பார் சுலுத்தானும் சரோஜினி தேவியைத் தக்கவாறுபசரித்தனர். ஸுலுத்தானின் மனைவி ஷெ தேவிக்குத் தங்கக் காப்பு முதலிய விலையுயர்ந்த நன்கொடைகள் அளித்தனர். சரோஜினிதேவியின் அரிய பிரசங்கத்தைக் கேட்ட ஐரோப்பியர் மிக ஆனந்தமடைந்து வியந்து பாராட்டிக் கடிதங்கள் அனுப்பினர்.

"கலிகாலத்தில் மற்றோர்விநோதம் ஏற்பட்டுவிடுமோ என்னவோ என எமக்கு அதிக பயமாயிருக்கிறது. இக்காலத்தில் அடுப்பூதும் பெண்கள் "சுதந்தரம், சுதந்தரம்" என அடித்துக் கொள்ளுகின்றனர். அவர்களுக்குச் சமவுரிமை அளிக்கவேண்டியது உண்மையே. அதுவும் நம் கடமையே. அவர்களை ஆடு மாடுகளைப்போல நினைத்து நடத்தலும் அநீதியே; ஆனால் கலிகாலக் கொடுமையினால் அவர்கள் உரிமை கொண்டவுடனே தத்தம் கணவன்மாரை அடுப்பூதும் வேலையி லமர்த்திவிட்டுத் தாம் சம்பாதிக்க வெளிக்கிளம்பி விடுவார்களோ என்பது தானே நமக்கு அச்சம்! இதை நினைத்து வயிறு புண்படலைக்கவேண்டுமேயல்லாது வேறென்ன செய்ய" என்று சென்ற 5௳ வெளிவந்த சென்னை "இந்து நேசன்" கூறுகிறது.

## தென்னிந்திய பெண்மணியின் உபந்நியாசம்.

திருநெல்வேலியிலுள்ள பிராமணோத்தம பெண்மணியாகிய ஸ்ரீமதி. லோகாம்பாள் அவர்கள் சென்ற இரவு கந்தர்மடம் கந்தபுராணமடத்தில் "பக்தி" என்னும் விஷயமாக ஓர்சிறந்த உபந்நியாசம் செய்தனர். அன்று பரம்பொருளாகிய சிவபெருமானைத் தமது பக்திவலையிற் படுத்திய மாணிக்கவாசகஸ்வாமிகள் குருபூசைத் தினமாதலின் பிரசாரகரவர்கள் ஷை சமயகுரவருடைய பக்தி நிலையை விரிவாக எடுத்து விளக்கிப் பேசினர். ஸ்ரீமதி. லோகாம்பாளவர்களுடன்வந்த ஸ்ரீமதி. வள்ளியாம்பாளவர்கள் இடையிடையே பக்திரசமான கீர்த்தனைகளை அன்புடன் ஓதி எல்லோரையும் ஆனந்தமடையச் செய்தனர். ஆண்களும் பெண்களுமாக அநேகர் சமுகமாயிருந்தனர். சனங்கள் இருப்பதற்கு மண்டபம் இடம் பெறுதென வெளியில் கதிரைகளும் வாங்குகளுமமைத்தும் அநேகசனங்கள் இடமின்றி நின்றனர்.

லோகாம்பாளவர்கள் (யாழ்ப்பாணம்) மேலைப்புலோலியில்ஓரிடத்தில் சுப்பிரமணியவியந்திரம் இருந்ததாகவும், அதனை எடுத்துப் பூசைசெய்யவேண்டுமென ஓர் உத்தரவு இற்றைக்குப் பதின் மூன்றுவருடங்களுக்குமுன் பெற்றதாகவும், அவ்வியந்திரத்தையே இதுகாறும் பெரிதும்பூசித்துவந்தனரெனறும்,இப்பொழுது அவ்வியந்திரத்தைமேலைப்புலோலியிற்றானே ஸ்தாபித்துப் பூசைசெய்யவேண்டுமென உத்தரவு கிடைத்தமையினால் இங்குவரநேர்ந்ததெனறும் கூறி முடித்தனர்: கூட்டம் இரவுபத்துமணி வரையிற் சமாப்தியாயிற்று. ஸ்ரீமதி. லோகாம்பாளவர்கள் இன்று மேலைப்புலோலிக்குச் செல்கின்றனர்.

—கடித

## கடிதம்.

### "மாமிசபோசனம் மனிதர்க்கு இயற்கையுணவா?"

ஓர் நண்பர் தாவரமாமிசபோசனம் மனிதர்க்கு இயற்கையானதென்று பல உபமானங்களெடுத்துக்காட்டி "உதயதாரகை" என்னும் பத்திரிகை மூலமாய் வாதித்துவந்தது வாசகரனைவரு மறிந்ததே. அத்தகைய சுருதியுக்தியனுபவமூன்றிற்கும் பொருத்தமில்லாக் கூற்றைச் சசீலமுஞ் சீவகாருண்யமுமிகுந்த அறிவுடைய பெரியோரெவரும் ஆதரிக்கமாட்டாரென்பது திண்ணம். என்னுலும், அக்கூற்றுச் சிற்றறிவுஞ் சிறுதொழிலுமிகுந்த எம்போன்ற சாமானிய மனிதரின்யுக்திக்கும் பொருத்தமாவென்பதைச் சிறிது ஆராய்வோம்.

ஷை பத்திரிகை 23-ம் இலக்கப் பிரசுரத்தில் அவர் எழுதிய விஷயத்தின் சாரமாவது:-"சராசரத்தினிடத்தும் ஆன்மாவுண்டென்றும் அவற்றுள் சரவுயிராகிய மாமிசம்புசித்தல் அதிகபாவமென்றும் அசரவுயிராகிய தாவரம் புசித்தல் அற்பபாவமென்றும்' இந்துக்கள், சொல்லுகின்றனர். அங்ஙனம் சராசரத்திலும் ஆன்மாவென்பதொருசமனாயிருக்கும் பொழுது தாவரம் புசிக்கிலென்: மாமிசம் புசிக்கிலென்? இரண்டுங்கொலைப்பாவமே"என்கிறார். இதில் சர்வமும் ஆன்மாஉண்டென்றும் அதுபற்றிப்பாவமுமுண்டென்றும் அவர்கூறியதுமறுக்கமுடியாத உண்மையே ஆயினும், அப்பாவத்தின் ஏற்றத்தாழ்வை எண்ணிப்பாராது ஆத்திரப்பட்டுக்கொண்டது வெகு நேர்த்தியாயிருக்கின்றது. இரண்டினதுபாவமும் ஒருசமனுமென்றால் வாழைக்காய், கத்தரிக்காய்; புடலங்காய் முதலியவற்றைத் தலைகீழாகவேனும் அல்லது ஒன்றோடொன்று நசுங்கும் படியாகவேனும் ஒருவன் தூக்கிச் சென்றால் அதைக் காண்போரெவருங்கவனிப்பதுமில்லை. அக்காய்த்தினுசுகளுக்குத்தங்களுக்கிம்சையுண்டவதாகக் கதறியழுவதுமில்லை. ஆனால் ஆடு, மாடு, கோழி முதலிய மிருகங்களை அவ்விதந் தூக்கிச் சென்றாலோ பொலிஸ்காரர் கயிறுசின்னக்காட்டிக் கன்னத்திலறைந்து நியாயத்தலம் வாவென்றிழுப்பர்; மற்றும்பிறர் இரக்கமற்றபாவியென்று இழிமொழி கூறுவர்; அதுவுமின்றேல் அம்மிருகங்களுந் தங்களுக்கிம்சையுண்டாவதாகக் கதறியழுது கண்ணீர்விடாதிரா. ஆகவே, தலைகீழாய்த்தூக்குவதே இம்சையென்றால் கொலைசெய்வதனால் என்பாவமில்லை?

இனி மரந்தறிப்பவரைக் கொலைஞரென்று ஒருவருமழைப்பதில்லை, ஆனால் மிருகக்கொலை செய்வோரைக் கடையரென்றுங்கொலைஞரென்றும் புலையரென்றுந் தாழ்ந்தோரென்றும் பல

வாறு இழிவாகக் கூறுகிறோம். அதிலும் மனிதக்கொலை செய்தவனையோ தீராத மரணதண்டனைக்கே ஆளாவதைப் பிரத்தியக்ஷமாய்க் காண்கின்றோம். இதனால் தாவரக்கொலையின் பாவம் அற்பமென்பதும், மிருகக்கொலையின் பாவம் அதிலுங்கூடியதென்பதும், மனிதக்கொலையின்பாவம் அளவிறந்ததென்பதும் தெளிவாவது காண்க.

"மனிதன் ஓர் மிருகத்தைக் கொலை செய்வதற்குடன்படாது மற்றோர் மிருகத்தாற் கடிபட்டோ சண்டையிட்டோ இறந்து கிடக்கும் மிருகத்தைப் புசிக்கலாம். ஏனெனில் அதன் கொலைக்குக்காரணம் மிருகமேயாதலால் அதனால் வரும்பழிபாவத்திற்கு உத்தரவாதி அம்மிருகமேயன்றிப் புசிப்போரல்ல" என்கிறார். சகோதரர்களே! சண்டித்தனைநனைப்பக் கவனியுங்கள் தாழ்ந்த மிருகஞ் செத்துக்கிடப்பதைத் அதுபோனதமற்றோர்மிருகம் அசட்டைசெய்து புசியாதொதுக்கிவிடவும் அதனை அறிவுடைய மனிதன உவப்பொடு புசிக்கவிரும்பும் மதிதானெனவே! அதுபோனதவுடலைப்பிணமெனறுமதித்து அது அடவிபோமளவும் நாம் பசிபட்டினிகிடக்கிறோமன்றோ! ஆகையினால் அத்தகைய ஆவியற்றவுடலை அதுபோனற நாய் நரி காகங்கழுகு முதலிய அறிவற்ற மிருகங்களும் பறவைகளும் பிடுங்கித்தின்று குதூகலிப்பதனைப் பகுத்தறிவுடைய மனிதனும் அப்பிணத்திற் பங்குபெறுவது அறிவுடையோமெனபதற்குச் சிறிதும் பொருந்தாதாகும்.

"மேலும், பிரசைகளின் நன்மைக்கும் சொத்துச் சுதந்திர பாதுகாப்புக்குமாகப் பல யுத்தங்கள் நடைபெறுகின்றன. அதிற் புயபல பராக்கிரமமுஞ் செல்வாக்குமுள்ள ஆடவர் பலர் தம் உடல் பொருள் ஆவி மூன்றையுந் தத்தஞ்செய்துவிடுகின்றனர். அதனுலவர்கள் தேசத்திற்கு நன்மை செய்வதற் தவிர மோட்சத்தையுமடைவதாக இந்துக்கள் முதல் யாவருமபிப்பிராயப்படுகின்றனர். மனிதரின் பாதுகாப்புக்காக யுத்தங்கள் நடைபெறுவது இன்றியமையாததென்பதும் அதன்பொருட்டு மனிதரும் உயிரிழக்கலாமென்பதும் நியாய ஆதாரமாகவே காணப்படுகிறது. ஆகையால் மனிதரின் நன்மைக்காக ஓர் மிருகத்தைக் கொலை செய்வதும பாவமாயிராது" என்கிறார்.

நீதி குன்றி அநீதி மேலோங்குங் காலங்களில் துட்டரையடக்கிச் சிட்டரைப் பரிபாலிப்பது மநுமுறை கண்ட மன்னர் கடமையாகும். அவ்வாறின்றித் துட்டரை யாதரித்துச் சிட்டரை வருத்துவாராயின் அது செங்கோன்மைக்குச் சிறப்பாகவேமாட்டாது. அதுபோல் மனிதருக் கின்னலையும் விளைபொருள் நாசத்தையுஞ் செய்யும் மான், மரை, பன்றி முதலிய வனமிருகங்களை வேட்டையாடிக்கொன்றார்; கொல்கின்றார்; கொல்வார் என்பது உலகறிந்த இரகசியமே. நண்பர் அதனைப் பின்பற்றி மனிதரின் பொருட்டு மிருகங்களைக் கொல்லக் கங்கணங் கட்டிக்கொண்டது கண்டால் குடிவளமில்லா வழியிற் போவார் வருவாருடன் போர்புரிந்து வெற்றிபெறுவதற்றவிரத் தின்றுபசியாறிவப்ப மிட்டுத் திரியும் கரடி, புலி, பன்றியாதி துட்ட மிருகங்களை ஏன் கொல்லக்கூடாது? அதுவன்றோ பாவமிராதசெய்கை. சமீபத்தில் மட்டக்களப்புக் கருகாமையாய் நரரை வெருட்டி உதிரங் குடித்து நாட்டிய மாடிய காட்டுப் புலியைக் கொன்றார்களே. அதுவன்றோ பாவமிராத செய்கை. கடிநாய்களைக் கொல்லும்படி அரசாங்கத்தா ருத்தரவிட வீதிக்குவீதி வலைவீசிப் பிடித்துக் கொன்றார்களே. அதுவன்றோ பாவமிராத்செய்கை. அதைவிட்டு மனிதருக்கு ஊழியஞ்செய்வதாயும், துட்டத்தன்மையில்லாததாயும், அடைக்கலம் புகுந்ததாயும், பால் தயிர் வெண்ணெயாதி பரிசுத்தவுணவைத் தருவதுமாகிய வீட்டு மிருகங்களை மனிதர் பொருட்டுக் கொல்வது பாவமாயிராதென்றுசொல்வது நம்பிக்கைத் துரோகமும் மநுநீதிக்கு விரோதமுமேயாகும்.

"கோரோசனை யென்பது மருந்துச் சரக்குகளிற் சிரேஷ்டமானதொன்று. அதைவேண்டுமானுல் உயிரைக் கொன்றே எடுக்கவேண்டும். அங்ஙனம் கொலைசெய் தெடுப்போராவது உண்போராவது நரகம் புகாது, உதவினோர்க்குக் கீர்த்தியும் உண்போர்க்குப் பிணிநீக்கமு முண்டாவதால், மனிதரின் உணவுக்காகக் கொலை செய்வது பாவமேயில்லை. உதாரணமாக:- சில கொடிய ரோகங்கள் பூச்சிகளினுலேயே உற்பத்தியாகின்றன. அதை நிவர்த்திக்க வேண்டுமானுல் விரோசனக் குளிகையினுலேயே அப்பூச்சிகளைக் கொல்லவேண்டும். அங்ஙனங் கொல்வதால் வைத்தியனும் பிணியாளனும் நரகம் புகுவாரென்பது நியாய விரோதமாம்" என்கிறார்.

ஓர் மிருகத்தைக்கொன்று அதனிடத்துள்ள கோரோசனையை விரும்புவதன் காரணம் என்னவென்று பார்க்கின் மனிதன் தனது சத்துருவாகிய பிணிகளின் தொல்லையைக் குறைத்து இன்னுஞ் சிறிதுகாலம் உயிரோடிருந்து இப்பிரபஞ்ச அகல் சுகமுத்தை அனுபவித்தேவேணுமென்ற ஆவாத்தான். என்செய்வது ஊற்றிற் கூற்றுவப்பிணிவிட்டதாயில்லை. தனதுயிருக்கு ஆபத்துண்டாகுந்தருணத்திலும், அதினின்றுந் தப்புவிக்க மற்றோருயிரை மருந்தாகக்கொள்ளாதேயென்பது திருவள்ளுவ நாயனார் வாக்கு. கொலைசெய்யா திருப்பாயாக என்பது ஏசுநாதரின் மற்றொருவாக்கு. இதிற் கொலையைக் குறிப்பிட்டது மனிதக்கொலையோ மிருகக் கொலையோ என்பதுதான் தெரியவில்லை. ஆனுல் மிருகக்கொலையென்றுதான் கருதவேண்டும். தேவைதைகட்குப் பலியிடுவதே சரியினமென்று வருதும் இக்காலத்தில் மனிதரின் உணவுக்கேனும் மருந்துக்கேனும் மிருகத்தைக் கொல்வது சரியென்று ஒத்துக்கொள்பவரெவர்? அதுவும் பாவமே. அன்றி அதன் ஆவியைப் போக்கிக் கோரோசனை எடுக்கவேணுமென்ற அவசி என்னே? இறந்த மனிதரின் என்பு, ரோமம், கொழுப்பு ஆகிய சிலவற்றை உபயோகத்திற்கு எடுப்பதுண்டு. என்றுலும், பிணியினுலிறப்பதையும் யுத்தத்தில் மடிவதையும் உத்தேசித்து உயிரோடிருப்பாரைக் கொல்வாரில்லை. ஆகவே, நண்பர் உருட்டி மருட்டிப் பல உவமானங்களையுந் திரட்டி உணவின்பொருட்டு உயிர்களைக் கொல்ல விரதம்பூண்டு நிற்பது வெறு விச்சையாயிருக்கின்றது. மனிதர் மிருகங்களை சர்க்கஸ்களுக்கும் பந்தயஓட்டத்திற்கும் பாரஞ்சுமக்கவும் உழவுக்கும் வண்டிகளுக்கும் இன்னும் பலவேறு பிரயோசனத்திற்கும் பழக்கி அதனுல் வயிறுவளர்த்து வருகிறார்களென்பது பிரத்தியக்ஷம். அதன்பயனுக அம்மிருகங்களுக்குக் கழுத்திலகிலிருக்கவோ புண்ணிருக்கவோ அடித்தழும்பிருக்கவோ இன்னும் இம்சைக்கேதுவான அறிகுறியெதையுங் கண்டவிடத்து அரசாங்கத்தார் அபராதம் விதித்துவிடுகிறார்களே அது ஏன்? அவரவர்பிரயோசனத்தின்பொருட்டன்றோ அடிப்பதும் பிடிப்பதும்? (வரும்).

இங்ஙனம்,
கா. க. தனபாலன்.

## இந்திய சமாசாரம்.

**இரண்டாவது ஜம்புலிங்கம்பிடிக்கப்பட்டான்:**

திநெல்வேலி ஜில்லாவில் இரண்டாவது ஜம்புலிங்கம் என்று பெயர்பெற்ற கிருஷ்ணசாமித் தேவனைச் சங்கரன் கோயிற் பொலிசார் பிடித்து விட்டார்கள்.

**பாரத கிறிஸ்தவ வர்த்தமானி.**

நாம் இந்தியாவில் சரியானபடி புறமதஸ்தரை கிறிஸ்தவர்களாக்க முயலுகிறதில்லை. நாம் தொகையைத் தான் கவனிக்கிறோமே யொழிய அவர்களுடைய மெய்யான ஜீவியமாறுதல்களைக் கவனிக்கிறதில்லை. இதனுலே இப்பேர்ப்பட்ட கிறிஸ்தவர்களுடைய சந்ததி கெட்டுப்போய் அவர்களுடைய ஜீவியமானது மிகவும் பரிதாபப் படக்கூடியதாயிருக்கிறது. இப்போதிருக்கிற இந்திய கிறிஸ்தவர்களில் மிச்சமான பேர்கள் சரியானபடி மார்க்கத்தை ஆராய்ந்து பார்த்துக் கிறிஸ்துவைப் பின்பற்றினவர்களல்ல. அநேகம் பேர் பண உதவியை நாடிவந்தவர்கள்; சிலர் பஞ்சகாலங்களிற் தங்கள் பசியைத்தீர்க்கும்படி குருமார் செய்யும் உதவிக்காக வந்தவர்கள். நூற்றுக்கு 90 பேர்களோ இந்தியாவில் மேல் ஜாதியார் செய்யும் உபத்திரவத்திலிருந்து நீங்கும்படி கிறிஸ்து மார்க்கத்தைப்பின்பற்றினவர்கள் என்று திருநெல்வேலியூர்ப் பாரதகிறிஸ்தவ வர்த்தமானி கூறுகிறது. உண்மையானவாக்கு.—லோகோபகாரி.

## காந்தியடிகளின் சத்திய தரிசனம்.

### "தோல்வியுற்றேன் தாழ்வுபெற்றேன்"

இவ்வாரத்து 'யங் இந்தியா' வில் அகில இந்திய காங்கிரஸ்கமிட்டி நடவடிக்கைகளைப்பற்றி மகாத்மாகாந்தி இரண்டு கட்டுரைகள் எழுதியுள்ளார். அவைகளுள் "தோல்வியுற்றேன் தாழ்வுபெற்றேன்" என்னுந் தலைப்பையுடைய முதலாவது கட்டுரையின் சாரம் பின் வருமாறு:—

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் நடவடிக்கைகள் நான் சிறை புகுவதற்கு முன்னுல் டில்லியில் நடந்த கூட்டத்தை எனக்கு நினைவூட்டின. உண்மை நிலையை டில்லியில் ஒருவாறு கண்டேன். ஆமதாபாத்தில் மீண்டும் இப்பொழுது என் நிலையை உணர்ந்தேன். என்னுடைய நான்கு தீர்மானங்களுக்கும் பெரும்பான்மையோரின் ஆதரவு இருந்ததாயினும் அதிகமாகக்கிடைத்த வாக்குக்கள் மிகச்சிலவேயாகும். அநேகமாக வாக்குக்கள் சமமாக இருந்தன. கோபிநாத் ஸாஹாவின் தீர்மானம் உண்மை நிலையைச் சந்தேகமற விளக்கிவிட்டது. மேற்படி தீர்மானத்தின்பேரில் செய்யப்பட்ட பிரசங்கங்களும், தீர்மானத்தின் முடிவும், அதன்பின்னர் நான் கண்ட காட்சிகளும் எனது கண்களைத் திறந்தன. ஸ்ரீமான் தாஸ் எட்டு வாக்குக்கள் குறைவினுல் தோல்வியுற்றதாக வெளிக்குத் தோற்றலாமாயினும் உண்மையில் அவருக்கு அது ஒரு பெரும் வெற்றியேயாகும். வாக்குக்களை எண்ணி முடிவுகூறும் வரையில் நான் எல்லாவற்றையும் பெரியதொரு வேடிக்கையாக எண்ணிப் பார்த்துக்கொண்டிருந்தேன். ஆனுல் உண்மையில் அது ஒரு வேடிக்கையல்லவென்றும் மகத்தான விஷயமென்றும் எனது உள்ளத்தினுள்ளே உணர்ந்திருந்தேன். வெளிக்குச் சந்தோஷமுள்ளவனுகக் காணப்பட்டேனுயினும் என் மனதில் அயரம் குடிகொண்டிருந்ததென்பதை இப்பொழுது உணர்கிறேன். வாக்குக்களின் முடிவு கூறப்பட்டபின்பு நாடகத்தின் பிரதான நடிகர்கள் வெளிச்சென்றனர். பின்னர் அங்கத்தினர் நடந்துகொண்ட பான்மை என் ஹிருதயத்தைப் பிளப்பதாயிருந்தது. பல முக்கிய தீர்மானங்கள் கவலையென்பது சிறிதுமின்றி நிறைவேற்றப்பட்டன. இடையிடையே விகடங்களும் பரிகாசங்களும் அங்கத்தினர்களுக்கு மகிழ்வளித்தன. ஒழுங்குக்கு விரோதமல்லவா என்றும், சமாசாரம் தெரியவேண்டுமென்றும் அடிக்கடி எழுந்து கேட்கலாயினர். மௌலாஞு முகமதலி அவைகளுக்கெல்லாம் பொறுமையுடன் பதில் கூறி வந்தது போற்றத்தக்கதாயிருந்தது. கீர்த்தியை நாடிக் கேள்விகேட்டவர்கள் அக்கிராசனரின் தீர்ப்புக்களுக்குக் கீழ்ப்படிந்தார்களென்பதை ஒப்புக்கொள்கிறேன். எவரும் கட்டுக்கடங்காமல் நடந்துகொண்டதாக வாசகர்கள் நினைக்கவேண்டாம். அபிப்பிராயபேதங்கள் பலமாயிருந்தபோதிலும் தனிப்பட்ட மனிதர்களைத் தாக்கிப் பேசாமல் இவ்வளவு மரியாதையுடன் அங்கத்தினர் நடந்துகொண்டதை இதற்கு முன் நான் அதிகமாகப் பார்த்ததில்லை. என்ன இருந்தாலும் கோபிநாத் ஸாஹா தீர்மானத்திற்குப் பிறகு சபை நடவடிக்கைகளின் கௌரவம் மறைந்துவிட்டதென்று கூறியேதீரவேண்டும்.

**கட்சிக்காரர்களுக்குக் காப்பளிக்குந் தீர்மானம்**

நேரமாக ஆக சபையிலிருந்து ஓடிப்போய் விடலாமாவென்று நினைக்கலானேன். இந்நிலைமையில் மற்றொரு தீர்மானத்தை எவ்வாறு கொண்டுவருவது என்று எண்ணினேன். ஐவகைப் பகிஷ்காரத் தீர்மானம் சம்பந்தமாக நியாயஸ்தலத்திற்கு இழுக்கப்படும் கட்சிக்காரர்களுக்கு விதிவிலக்குச் செய்யும்பொருட்டு ஒரு தீர்மானங் கொண்டுவருவதாக வாக்களித்திருந்தேன். காரியக் கமிட்டியால் ஒப்புக்கொள்ளப்பட்ட தீர்மானத்தில் இந்த விலக்கு இருந்தது. ஆனுல் நான் பின்னர்த் தயாரித்ததீர்மானதில் கட்சிக்காரர்களைக் காக்கும் பிரிவைச் சேர்க்க மறந்துவிட்டேன். அதைத் தனித்தீர்மானமாகக்கொண்டு வருவதாக வாக்களித்திருந்தேன். தீர்மானத்தைப் பிரரேபிக்கையில் ஸ்ரீமான் கங்காதரராவ் தேஷ்பாண்டேயின் உதாரணத்தை எடுத்துக் காட்டினேன். பொதுவாக, விதிகளுக்கு விலக்கு ஏற்படுத்துவதில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆனுல் உறுதியுள்ள ஒத்துழையாதார் பலரும் இவ்விஷயத்தில் நியாயஸ்தல பகிஷ்காரம் செய்ய முடியாமலிருப்பதை நான் அறிவேன். ஒத்துழையாதார் நியாயஸ்தலத்திற்குப் போகமாட்டார்களென்னும் நம்பிக்கையினுல் கடன்காரர்கள் கடன் கொடுக்க மறுத்திருக்கின்றனர். அவ்வாறே எதிர்வாதம் செய்யமாட்டார்களென்று ஒத்துழையாதார்மீது வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. ஒத்துழையாதார் பலர் பொருளிழந்தாலும் நியாயஸ்தலத்திற்குப் போவதில்லையென்று உறுதியுடனிருந்து ஏராளமான கஷ்டநஷ்டங்களுக்கு ஆளாயிருக்கின்றனர். ஆயினும் எல்லோரும இவ்வாறு நடந்துகொள்ள முடியவில்லையென்பது உண்மையே. நியாயஸ்தலத்திற்குப் போவதை ஓரளவு அநுமதித்து அகில இந்திய கமிட்டியும் அப்போதப்போது விதிகள் செய்திருக்கின்றது. ஆதலின் ஐவகைப் பகிஷ்காரஅநுஷ்டானத்தை வற்புறுத்தும் இத்தருணத்தில் கட்சிக்காரர்களின் நிலைமையை வரையறுத்துவிட விரும்பினேன். எல்லாப் பகிஷ்காரங்களையும் பூரணமாக நிறைவேற்றியவர்களே காங்கிரஸ் நிர்வாகத்தில் இருந்தால் அதைவிட எனக்கு மகிழ்ச்சி தரத்தக்கது வேறொன்றுமில்லை. ஆனுல் தற்போதைய நிலைமையில் நியாயஸ்தல பகிஷ்காரத்தைப் பூரணமாக நிறைவேற்றுவது பலரால் இயலாதென்னும் உண்மையை நன்குணர்ந்து இதனுலேற்படக்கூடிய அபகீர்த்தியை யேற்றுக்கொள்ளத் தயாராகி மேற்படி தீர்மானத்தைக் கொண்டுவந்தேன்.

### "உன்னுடைய காலம் ஆகிவிட்டது"

நான் தீர்மானத்தைப் படித்து முடித்தவுடனே திரானை ஹரி ஸர்வோத்தமராவ்எழுந்து தீர்மானத்தைப் பலமாக எதிர்த்துப்பேசினுர். என்னை எதிர்க்க வேண்டியிருப்பதைப் பற்றி வருந்துவதாக அவர் கூறினுர். அவர் வருந்த வேண்டியதில்லையென்றும் குறையுள்ள தீர்மானத்தைக் கொண்டுவந்த நானே வருந்தவேண்டுமென்றும் பதிலளித்தேன். நான் அவருடைய எதிர்ப்பை விரும்பியதுடன் வாக்குக்களின் முடிவு எவ்வாறேற்படுமோவென்று ஆவலுடன் எதிர்பார்த்தேன். ஸ்வாமி கோவிந்தானந்தர் ஓர் ஆட்சேபத்தை எழுப்பினர். அதற்கு அக்கிராசனர் பதிலளித்தார். அதற்குள் டாக்டர் சோயித்ராம் எழுந்து சட்ட அமைப்பைப்பற்றிய பிரச்னை ஒன்றைக் கிளப்பிவிட்டார். டாக்டர்சோயித்ராம் பொறுப்பையுணர்ந்தவர். மகத்தான தியாகம் செய்து நாட்டிற்காக வறுமை விரதம் பூண்டவர். அவர் இவ்வித ஆட்சேபத்தைக் கிளப்புவாரென்று நான் எதிர்பார்க்கவில்லை. அவர் சிறிதும் யோசனையின்றி மேற்படி தீர்மானம் காங்கிரஸ் பகிஷ்காரத் தீர்மானத்திற்கு விரோதமான தல்லவாவென்று கேட்டார். மௌலாஞு முகமதலி என்னைப்பார்த்து அவருடைய ஆட்சேபம் நியாயமானதல்லவா என்று வினவினுர். நான் ஆம் என்று பதிலளித்தேன். தீர்மானம் ஒழுங்கானதல்லவென்று மௌலாஞு தீர்ப்பளித்தார். என்மனம் விழுந்து விட்டது. யாருடைய பேச்சிலேனும் நடவடிக்கையிலேனும் எவ்விதத்தவறுமில்லை. அனைவரும் மரியாதையுடன் நடந்து கொண்டார்கள். ஆனுல் பொய்யுலகத்தில் உழலுவதுபோல் தோன்றிற்று. ஆட்சேபங்கள், பட்டினியினுல் எலும்பும் தோலுமான ஒருவனிடம் தனடக்கத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்வதுபோல் இருந்தன. தாங்கள் செய்வது இன்னதென்றறியாமலே ஒவ்வொருவரும் நடந்து கொண்டனர். "ஏ, அறிவிலி, நீ சொல்வது இனிநடவாதென்பதை அறியாயோ? உன்னுடையகாலமாகிவிட்டது', என்று அவர்கள் மூலமாக ஆண்டவன் எனக்கு அறிவுறுத்துவது போலிருந்தது.

கங்காதரராவ் தாம் ராஜீனுமா செய்து விடுவதாகக் கூறினுர். நானும் சம்மதித்தேன். சபையினர் அவருடைய ராஜீனுமாவை ஏகமனதாக ஒப்புக் கொண்டனர். கங்காதரராவுக்கு அதனுல் லாபமேயன்றி வேறில்லை. ஷௌகத் அலி எனக்கெதிரே வீற்றிருந்தார். அவரில்லாவிடில் எழுந்தோடிப்போயிருப்பேன். தீமையிலிருந்து நன்மையுண்டாகுமா? நான் தீமையுடன் ஒத்துழைக்கவில்லையா? என்று சிந்தித்துக்கொண்டிருந்தேன். "தவறொன்றுமில்லை, எல்லாம் சரியாகிவிடும்" என்று மௌலாஞு ஷௌகத் அலி தமது பெரிய கண்களின் மூலமாகக் கூறுவது போலிருந்தது. சபையைக் கலைத்துவிடட்டுமா என்று அக்கிராசனர் கேட்டார். சரியென்று கூறினேன். (வரும்.)

—நவசக்தி.

## மதுபானஞ்செய்தல்.

சிலர் தாம் கள் சாராயம் சாப்பிடாமல் பிராந்தி, வைன், விஸ்கி முதலியவைகளை யுட்கொள்ளுவதால் தம் தொழில் எவ்வகையினுந் இழிந்ததல்லவென்று தப்பெண்ணம் கொள்ளுகின்றனர். இவ்வாறு அவர்கள் தப்பபிப்பிராயப் படுவது சிறிதும் மதிக்கத்தக்கதன்று சிறிது யோசிக்கின் இது நன்கு விளங்கும். ஒரு திருஷ்டாந்தத்தால் விளக்குவோம். திருடர்களுள் ஒருகாசு திருடினவனும், ஒரு அணு திருடினவனும் ஒரே வகுப்பினைச் சார்ந்தவராகவே நாம் கொள்ளவேண்டும். ஒரு காசிற்கும் ஒரு அணுவிற்குமுள்ள ஏற்றத் தாழ்வு அதிகமாயினும் அவர்கள் செய்யுந் தொழிலும், குற்றமுமொரே தன்மையன வெனபது கருதத்தக்கது.

ஆகையால் வைன், ரம் முதலியவைகளைக் குடிப்போர், கட்குடிப்போரினும், எவ்வகையினும் மேலானவரல்லர் எனபது திண்ணம். அவ்வாறு மேலானவர்களாக அவர்களைக் கொள்வதும் சிறிதும் பொருத்தமுடையதன்று ஆகவே அவர்கள் அவ்வாறு நினைத்து மகிழ்ச்சியடைந்து தம் மதியிழக்காமலிருப்பார்களாக.

நம்மவர் குடிக்கும் வகைகள்:—மேற்போந்த விஷயங்களால் மதுபானஞ் செய்தல் பெரும்பான்மை பல விடங்களிலும் நம்மவர்களால் கையாண்டு வரப்படுகிறதென்பது நன்குவிளங்கும். அத்தொழிலைப் பரிபாலித்துவரும் நம்மவரில் பலர் பலவிதமாயுட்கொள்ளுவதாகத் தெரியவருகின்றது. சிலர் தாம் செய்வது பகிரங்கப்பட்டால் தமக்கென்றுமழியாப் பெரும் புகழென்றும், தம்மைக்கேட்பவர் யாருமின்றென்றும், தம்மட்டில் தாமே அரசரென்றும் பலவகை யற்பவெண்ணம் கொண்டு வெளிப்படையாக மதுபானஞ் செய்யுமிடத்துக்கு நேராகச் சென்று தம் வழக்கப்படி யுட்கொண்டு திரும்பித் தன் வீட்டிற்குச் செல்கின்றனர்.

மேற் கூறியவரின் ஆர்ப்பாட்டம் பின்னுல் நன்கு விளங்கும். சிலர் யாருக்கும் தெரியாதபடி அஸ்தமித்தபிறகு, தாம் வழக்கமாய்க் குடிக்குமிடத்திற்குச் சென்று குடித்து வருகின்றனர். அவ்வாறு பயந்து போவதனுலேயே அவர் செய்வது பழிக்கத்தகுந்த பெருங் குற்றமென்று ஸ்தாபிக்கப்பட்டுப் பலராலுமிகழப்படுகின்றது. சிலர் தாமே சென்றுகுடியாமல்தம் சேவகர் மூலமாய் வரவழைத்து உட்கொள்ளுகின்றனர் அவர் மதியீனமென்னென்று சொல்லுவது? அவரே நேரில் சென்று சாப்பிடுவாராயின், அவர் தம் மகிமை அவர் மட்டிலுமாகிலும் நிற்காதா? அதற்குமாறாகச் சேவகர் மூலமாய்த் தருவித்து உண்ணுவதால் தம் சேவகராலும், புறத்திலாவது இழித்துக் கூறப்படுகின்றனர். இவ்வாறு மதியிழாது செய்யாவிடின்

## அடைவுநகைவிற்பனவுவிளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் சுன்னாகம் நாகநாதபிள்ளை பொன்னம்பலமிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகை விபரம்:—

1923-ம் ௵

| நம். | மாச. | திக. | ரூ. | ஊர் பெயர் | நகைவிபரம். |
|---|---|---|---|---|---|
| 50 | 1 | 24 | 22 | சுன்னாகம் கந்தர் ஐயம்பிள்ளை, | அரைத்தங்கப்பவுண் 1, மோதிரம் 1 |

விற்பனவு:—இரத்தாக்ஷி௵ ஆடி௴ 6-ந்திகதிக்குச் சரியான 1924௵ ஜூலை௴ 21௳ திங்கட்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் மேற்படி சந்தைக் கிட்டங்கியில் பிரசித்த ஏலத்திற் கூறி விற்கப்படும்.

(Mis. 506)

தம்பிப்பிள்ளை சிவசம்பு,
வெர்திஸ்மேஸ்தர்.

அவருயிர் தரிக்காதோ? சில கனவான்கள் கம்பெனியிலிருந்து தம் விலாசத்திற்கு மொத்தமாய்த் தருவித்து அருந்துகின்றனர். அப்படிச் செய்வதனால் தமக்குப் பழக்கமுள்ள நண்ணடக்கை கனவான்களுக்கு மிவர் தம் ரகசியம் வெளிப்பட்டு இதற்கு முன் அவர்களிவரை மதித்து வந்த மதிப்பை முற்றிலு மிழக்கின்றனர். இப்படி அற்ப தொழிலைச் செய்து தம் புகழுக்கோர் ஹானி யென்பதிவரறிகின்றுரில்லை. சிலர் தாமனுபவித்தவரும் நோய் முகாந்திரமாகக் குடிக்கின்றனர். எவ்விதத்திலிவர்கள் மற்றவர்களிலும் சிறந்தவராவர். தாம் வேண்டுமென்று குடிப்பது பிறரறியா விடினும் தம் மனதிற்காயினும் தெரியாமற் போகுமா? எவ்வகையிலும் தம் மனதே தன்னைச்சுடுமென்பது நிச்சயம். இவ்விடத்து

"தன்னெஞ்சறிவது பொய்யற்கபொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச்சுடும்"

என்னும் திருவள்ளுவர் திருவாக்கு கருதத்தக்கது. ஆயினும் நன்முய் யோசித்துப் பார்த்தால், இவ்வகுப்பினரே மற்றையவரிலும் புத்தியுள்ள குடிவெறியரென்பது புலப்படும். நாமாலோசிக்கும்பொழுது முதல் வகுப்பினரைத் தவிர மற்றெல்லா வகுப்பினரும் தம் மனதாரவுண்பது, பிறர்க்குத் தெரியாமலிருக்க வேண்டியே அவ்வாறு செய்வதாகத் தோன்றுகிறது. தம்மனதாரச் செய்யும்போது அத்தொழிலை மறைக்க முயல்வதில் யாது பயன்? ஒருவித பயனுமில்லை யென்பது திண்ணம். மேலும்மறைத்து வைக்க முயற்சி செய்பவர் எண்ணம் நிறைவேறுகின்றதாவென்று பார்த்தால், அவர்கள் னொன்கை சிறிதாகிலும் பூர்த்தியாவதாகத் தெரியவில்லை அவர்கள் கருத்திற்குமாருகப் பலவிதத்திலுமவர் செய்கை பறையடிக்கப்படுகின்றது. தவிர புண்ணுற்றப் பிரியப்படுவோன், அப்புண்ணைக்கிழித்து மருந்திட்டாற்றினுலாறும் என்றறியாமல் அதை மூடி வைத்துச் சீழ்புரை யோடுவதினுலோரிடத்திலிருந்த புண் மற்றும் பல விடத்திலும் தோன்றித் தேகத்தை வும்சிப்பதறியானோ? அதுபோலவே தம் செய்கையை மூடிவைத்துள்ள கனவான்களின் ஒழுக்கம் நாளுக்குநாள் சீர் கெடுவதல்லாமற் பலராலுமிகழ்ந்துரைக்கப்படுகின்றது. இவ்விடத்து

"நாணவேலிக் கொள்ளாது மன்னோ வியன்
ஞாலம், பேணவர் மேலாயவர்."

உயர்ந்தோர் நாணத்தைக் கொள்ளாமல் சாரமற்ற இவ்வுலகத்தி னியல்பை விரும்பமாட்டாரென்று நம்முன்னோர் கூறிப்போந்துள்ள திருவாக்கைப் பலமுறை யோசித்துத் தம் செய்தொழிலால் நாணத்தைக்கொண்டத்தொழிலைச் சீக்கிரம் விடக்கடவர்.

**ஆங்கிலேயர் குடிக்கும் வகைகள்.**—சிலர் தாம் குடிப்பது கிரமமென்று நினைக்கின்றனர். அவ்வாறு நினைப்பதற்குக்காரணம்அவர்களைக் கேட்பின் நாகரிகமடைந்த ஆங்கிலேயர்கள் குடிக்கிறுரென்றும், அவர்கள் குடிக்கும்பொழுது என் பழக்கவொழுக்கங்களை யனுசரிக்கக் கூடாதென்றும் வாதாடுகின்றனர். அப்படி நம்மவர் சொல்லுவதற்கு நாம் ஆங்கிலேயர்களா? நமது தேசம் அவர்கள் தேசம்போல் குளிர்ந்ததா? நம் தேசத்தின் சூட்டைப் பொறுக்க முடியாமல் எத்தனைபேர் பரிதபிக்கின்றனர். இதையுணர்ந்தா லவர் வழக்காடுவது சற்றும் பொருந்தாதென்றறியலாகும். இதைமறுக்க ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வந்தும் குடிப்பதற்குக் காரணம் கேட்கின்றனர். நாமதற்கு அவரது வழக்கமே ஒருகாரணமாகக் கூறவேண்டும். இதுபோலவே மதுபானஞ் செய்தல் நமக்கு வழக்கமாய்விட்டதாகச் சொல்லுவர். முதலில் இப்பழக்கத்திற்குச் சம்மதிப்பானேன்? இரண்டாவது தமக்குப் புத்தி வந்த பிற்பாடும் இப்பழக்கத்தை விட்டுவிட முயலாது வீண்வழக்காடுவானேன். நம்மவ ரேன் சிறிதாகிலும் ஆலோசனை செய்வதில்லை? இக்கேள்விகளுக்கு அவரைத்தவிர நம்மால் பதிலுரைக்கமுடியாது. திடீரென்று தம்பழக்கத்தைக் கைவிடாவிட்டாலும் நாளடைவிலாவது கைவிட்டுவிடலாமல்லவா? நாம் மனதாரச் செய்யத் துணிந்தால் முடியாதது முண்டோ?

இவைகளை நம்மவர் நன்கு கவனிப்பாராக. இந்தியர்கள் ஆங்கிலேயர்களுடன் பழகி, அவர் நடையுடைகளைக் கொண்டால் அவர்கள் பழக்கவழக்கங்களையுங் கொள்ளவேண்டுமோர் நியதியுண்டா? அவ்வாறென்றுமில்லையே. மேலும் மற்றவருடன் பழகுவது அவரது நற்குணத்தை யனுசரிக்கவா? அல்லது நற்குணத்துடன் துர்க்குணத்தையுஞ் சேர்த்துக் கைப்பற்றவா? இவ்வாறு சொல்லப் புகுந்தால் ஆங்கிலேயர்கள் குடிப்பது தவறென்று சொல்ல வந்ததல்ல. அவர்கள் தேசத்தின் நிலைமையைக் கருதும்போது அவர்கள் செய்கைக்குச் சமாதானம் கூறலாம்; நம்மவர் சொல்வதற்கு எவ்வகைச் சமாதானஞ் சொல்ல முடியும்.

தவிர ஆங்கிலேயர்கள் மதுவுண்ணும் வகையையும் சமையங்களையும் பார்த்தால் அவர்கள் செய்வதால் தேகத்திற்கு யாதொரு கெடுதியுமின்றிச் சுகமா யிருக்கிறுர்களென்பது புலப்படும். ஆங்கிலேயர்கள் அளவுக்கு மீறிப் பிராணன் போயினுஞ் சாப்பிடுவதில்லை. இது அவர்களுடன் பழகினவர்களுக்கும், அவர்கள் சாப்பிடுவதைப் பார்த்தவர்களுக்கும் நன்ருய்த் தெரியவரும். அவர்களைப்போல் நம்மவர் எப்பொழுதாவது அளவுவைத்துச் சாப்பிடுகின்றனரா? அல்லது அவர்களைப்போல் இன்னகாலத்தில் சாப்பிடுவதென்ற நியதியாவது நம்மவர்பாலுண்டா? இரண்டுமில்லை. நம்மவர் தம் வயிறுஎவ்வகையினும்நிறையவேண்டுமென்னும் கொள்கை யுடையவ ரென்பது யாவருக்குந் தெரிந்த விஷயமே. ஆகையால் வீண் விதண்டாவாதத்தால் வரும் பலன் யாது?

மதுபானஞ் செய்தல் சில குடும்பங்களிற் பரம்பரையாய் வழங்குகின்றது:—சில குடும்பங்களில் மூத்தோர் குழந்தைகளுக்கும், மனைவியருக்கும் தாம் குடித்தபின்பு கள்ளாவது, சாராயமாவது பலத்தைத் தருமென்றெண்ணி ஆசையுடன் கொடுத்துவருகின்றனர். பெண்புத்தியும், மழலைப்புத்தியும் முன்னமேயே நிக்ஷண்யம். குடித்தபின்னவ்வாறிருக்குமென்பது சொல்லாமலே விளங்கும். குடிப்பவர்களின் மனைவியரும் மக்களும் தாம்கொண்ட வழக்கத்தைக் கைவிடாமல் காடுபோமட்டும் குடித்தே காலத்தைப் போக்க வாரம்பிக்கின்றனர். பரிசோதிக்கும்பொழுது பலத்தைக் கொடுக்கும் நல்லுணவைச்சாப்பிட்டெ ாருயுகமிருக்கும் மாந்தரின்மதி யிப்படியிருக்குமா? ஐயோ! இவ்வாறு துர்வழக்கம் கைக்கொண்டுழலவோ பிரமன் மனிதர்களைச் சிருட்டித்தனன். ஒரு நிமிஷமாகினும் தம்தீயவொழுக்கமித்தன்மைத்தென்பதையாலோசியார்களா? ஆலோசிக்கின் தம்மறிவு கெடாதென்ப துண்மை. சிலர் மதுபானஞ் செய்வது தம் தலைவிதியென் றெண்ணுகின்றனர். தம் மனப்பூர்த்தியாய் வேண்டுமென்றே யொழுகுவது தலைவிதியாகுமா? மேலும் தம்மறிவைச் செலுத்தி யோட்டத் துணிந்தாலோடுந்தன்மையதாகிய மதுபானஞ் செய்தலே தலைவிதியாக்கும்? —"கொய்குவேள்"


## விளம்பரம்.

யாழ்ப்பாணம் ரேகுக்கு அருகாமையாயிருக்கும் விறகு காலையில் கீழே குறிக்கப்பட்ட மரங்கள் வருகிற ஆடி௴ 24௳ வியாழக்கிழமை முற்பகல் எட்டரைமணி (8-30) தொடக்கமும், 25௳ வெள்ளிக்கிழமை முற்பகல் எட்டரை மணி (8-30) தொடக்கமும் பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணம் காட்டேசண்டுத் துரையவர்களால் விற்கப்படும்.

24-ம் திகதி வியாழக்கிழமை ஏலத்தில் விற்கப்படும் மரங்கள்.

50 பாலைகள்
25 முதிரைகள்
9 யாவறணை
20 சமண்டலை

25-ம் திகதி வெள்ளிக்கிழமை ஏலத்தில் விற்கப்படும் மரங்கள்.

75 பாலைகள்
25 முதிரைகள்

முதிரைக்கொப்புகள், கழிக்கப்பட்ட வளைகளும் பாச்சுக்களும்.

J. D. SARGENT,
வனபரிபாலனர்,
கண்டி, காட்டுக்கந்தோர்.
ஆடி௴ 1௳ 1924.
(G. 410)



## தேக்க மரம்.

றங்கூனிலுள்ள பேர்போன அங்கில கொம்பனியாரிடமிருந்து புதிதாக வருவிக்கப்பெற்றதிறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவை தொண்டமானுற்றிலும், யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள எமது கிட்டங்கி வளவிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை விபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானுறு.

தந்திவிலாசம்:—
மாபி. வல்லுவெட்டித்துறை.
(H. 29.)



## திறமானமங்களூர்ஓடுகள்

மெஸ்சேர்ஸ் மோர்க்கன் அன்கோ அல்வாரிஸ் அன்கோ திறமோடுகளும் அரையோடுகள், முகட்டோடுகள், காற்ரோடுகள், பீலியோடுகள், கண்ணுடியோடுகள், சித்திர சித்தமர்ணஓடுகள் தளவரிசைக்கற்கள், பூச்சட்டிகள் திறம் போட்லாந்து சிமெந்து முதலானவைகளும் சகாயமான விலைக்கும் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கா. வ. சுப்பிரமணியம்,
ஒட்டுக்கம்பெனி,
தேவரீர்குளம்,
யாழ்ப்பாணம்.
(H. 23).



இனும்! இனும்!! இனும்!!!

இதனடியில் கண்ட மருந்து வாங்குகிறவர்களுக்கு மட்டில்

வைத்திய சாஸ்திரத்தில் அதிக அனுபவமுள்ள ஹக்கீம் K. முகம்மது யூசுபு அவர்களால் செய்யப்பட்ட (வைத்திய சாஸ்திர நீதிநூல்) 96 பக்கம் அடங்கிய புஸ்தகம் ஒன்று இம்மருந்துடன் இனுமாக அனுப்பப்படும். மானிட சரீரத்தில் பரவும் பல நோய்கள் வீரியபலஹீனங்கள் நரம்புத் தளர்ச்சிகள் வீரிய நஷ்டத்தின் விபரங்கள் அது ஜனித்த காரணங்களையும் அதன் குணக் குறிகளையும் அதற்கு மருந்தும் பரிகாரமும் சரீரத்தில் உள்ள சில ரகசியமான விஷயங்களையும் வைத்தியரிடம் வெளிப்படுத்தாமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளக்கூடிய அருமையானதோர் சாஸ்திரமாயிருக்கின்றது.

அவுஷதங்களில் அருமையான வித்தை.

ஜெகப்பிரசித்தி பெற்ற

# சிட்டுக்குருவி அமிர்த லேகியம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒருவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாக்கும்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதமுள்ள உண்மை அவுஷதம்
குணமில்லையென்று ரூபிக்கிறவர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கோடுக்கப்படும்.

வீரியபுஷ்டியையும் மன உற்சாகத்தையும் கொடுப்பதில் இதற்குச் சமமாய் எதைக் காட்ட முடியும். இதனை அனுபவித்தவர்கள் இப்பெருமை தங்கிய மருந்திற்கு உள்ள அபூர்வசக்தியைப் போலே இவ்வுலகத்தில் வேறு எந்த மருந்திற்கும் இல்லையென்று அனேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எழுதியிருக்கிறார்கள்.

அன்பனே! இதுவரையிலும் வீரியதத்துவத்திற்காகவும் நாடி நரம்புகளின் உற்சாகத்திற்காகவும் மூளையைப் பலப்படுத்தி ஞாபகசத்தியை விர்த்திசெய்யவும் தேககாங்கையினுல் நீற்றுப்போகும் பலஹீனம் பற்பல வாய்வுரோகம் இடுப்புவலி கைகாலசதி மலச்சிக்கல் பசிமந்தம் இவைகளுக்கெல்லாம் எத்தனையோ விதமான அவுஷதங்கள் சாப்பிட்டிருப்பீர்கள். அவைகளுக்கெல்லாம் இது முதல்தரமான மருந்தென்று தங்களின் சினேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

முக்கிய கவனிப்பு:—சில போலி சிட்டுக்குருவி லேகியங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் இனுமென்று சபதங்கள் கூறிக்கொண்டு பல விளம்பரங்கள் வெளிவந்துகொண்டிருக்கிறபடியால எமது விலாசத்தைக் கவனித்து ஆடர் செய்யவேணும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 40 நாள் | 80 வேளை | டப்பி 1க்கு | விலை | ரூபா | | 10—0—0 |
| 20 ,, | 40 | ,, | ,, | ,, | ,, | 5—0—0 |
| 10 ,, | 20 | ,, | ,, | ,, | ,, | 2—8—0. |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இந்தியா, பர்மா, சிலோன் இம்மூன்று தேசங்களுக்கும் வி. பி. யில் மருந்து அனுப்புவோம். பினங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேச வாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் செலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணம் அனுப்பினுல் மட்டில் மருந்து அனுப்பப்படும்.

விலாசம்:

ஹக்கீம் கா. முகம்மது யூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, (தென்னுற்காடு ஜில்லா)

Hakeem K. Mohamed Yoosoof,
*Mohamedia Medical Hall,*
Porto-Novo, S. A. Dt. (INDIA.)

(H. 27.)



உங்கள் குழந்தைகளுக்கு

# லக்ரொஜின்

என்னும்

இயற்கையான பாலுணவை ஊட்டி
நன்மையடையுங்கள்.

இந்தப் பாலுணவே
முலைப்பாலுக்குச் சமானமானது.

இது
தசையையும் என்புகளையும் விருத்தி செய்யும்
சக்திவாய்ந்தது.

இந்த உணவை உண்டு வளர்ந்த குழந்தைகள்
இறுக்கமான தசைநார்களும்
அரோகதிடகாத்திரமு முடையவர்களாய்
இருக்கிறார்கள்.

# லக்ரொஜின்

சவலைகளைப் பராக்கிரம முடையவராக்கும்.

இந்த உணவை
இலங்கையிலுள்ள ஒளஷததசாலைகளிலும்
கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி இடங்களில் கிடைக்காவிடில்
நேரே எங்களுக்கு எழுதுங்கள்.

மாதிரி லக்ரோஜின் உணவும் அதின் விபரங்களடங்கிய புத்தகமும்
உடனே அனுப்பப்படும்.

பிறீ கூப்பன். .H .O

நேஸ்லின் & அங்கிலோ சுவிஸ்
கொன்டென்ஸ்ட் மில்க் கோ.,
தபாற்பெட்டி, 189,
கொழும்பு.

தயவுசெய்து உங்கள் அரிய புத்தகத்தில் (Baby Book) ஒன்றும், மாதிரி லக்ரொஜின் உணவும் கிரயமின்றி அனுப்பவும்.

பெயர்:— ..............................

விலாசம்:— ..............................

(Q. 49.)


வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.